செ.வெ.எண்.92 நாள்.03.06.2019

**பத்திரிக்கை செய்தி**

**காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலில் அத்திவரதர் வைபவம் – 2019 வருகிற ஜீலை மாதம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெறவுள்ளது. இவ்வைபவம் நாட்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க விரும்புவோர்கள் காஞ்சிபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்து உணவு பாதுகாப்பு துறையில் உரிமை பெற்று அன்னதானம் வழங்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.**

காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலில் அத்திவரதர் வைபவம்– 2019 வருகிற ஜீலை மாதம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெறவுள்ளது. இவ்வைபவம் நடைபெறும் நாட்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க விரும்புவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சார் ஆட்சியர் அவர்கள் அலுவலகத்தில் அனுமதி வேண்டி பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவுக்கான நடைமுறை 05.06.2019 முதல் தொடங்கப்படவுள்ளது. இதில் பதிவு செய்யும் நபர்கள் கட்டாயம் உணவு பாதுகாப்பு துறையில் அன்னதானம் வழங்க உரிமை பெற்றுக்கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சுத்தம், சுகாதாரத்துடன் தாரமான உணவுகளை அன்னதானமாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. அத்திவரதர் வைபவத்திற்கு வருகை தரும் பக்தர்களும் அன்னதானம் வழங்க விரும்பும் அன்பர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், அன்னதானம் வழங்குவதற்கான உரிமை பெற உணவு பாதுகாப்புத் துறை தொலைப்பேசி எண்.044–27233540 என்கிற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.